**02-02-2026**

**Spl.CC.No.80/2019**

**P.W.54** சண்முகபிரியா
**(** எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்**. )**

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

அ.த.சா.ஆ.108 முதல் தகவல் அறிக்கையானது நான் Suo moto வாக எடுத்துக் கொண்டது என்று சொன்னால் சரிதான். ஆனால் அதற்கு முன்னர் நான் முதல்கட்ட விசாரணையை மேற்கொண்ட பிறகுதான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். எனக்கு தலைமையகத்திலிருந்து அனுப்பப்பட்ட மனுவின் அடிப்படையில் முதற்கட்ட விசாரணையை நான் மேற்கொண்டேன். முதற்கட்ட விசாரணையை மேற்கொள்வதற்கு பிரிவு 17 PC Act ன்படி எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால், அப்பொழுது கொடுக்கப்படவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட பின்னர் எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. அ.த.சா.ஆ.109 ன் அடிப்படையில் பிரிவு 17 ன்கீழ் புலன் விசாரணை செய்வதற்கும், அ.த.சா.ஆ.110 ன் பிரிவு 18 ன் கீழ் அடிப்படையில் வங்கி ஆவணத்தை கைப்பற்றுவதற்கும், பார்வையிடுவதற்கும், ஆய்வு செய்வதற்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனது முதற்கட்ட விசாரணையின் அறிக்கையை எப்பொழுது தலைமையகத்திற்கு அனுப்பினேன் என்று நினைவில்லை., எனது மதற்கட்ட விசாரணையின் பொழுது செக்பீரியடை (Check period) உறுதி செய்து கொண்டேன். என்னுடைய முதற்கட்ட விசாரணையின் அறிக்கையில் கிரினிவாச பிரசாத்தின் புகாரின் அடிப்படையில் எனது அறிக்கை உள்ளதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால், எனது அறிக்கையை பார்க்காமல் பதில் சொல்ல இயலாது. எனது மேல் அதிகாரி கேட்டுக் கொண்டதன் அடிப்படையில்தான் நான் முதற்கட்ட விசாரணையை செய்தேன் என்று சொன்னால், நான்

முதலில் கூறியதுபோல் எங்கள் தலைமையகத்திலிருந்து வரப்பெற்ற மனுவின் அடிப்படையில் நான் முதற்கட்ட விசாரணையை மேற்கொண்டேன். முதற்கட்ட விசாரணையை முடிக்க எனக்கு எவ்வளவு காலம் ஆனது என்று எனக்கு தற்பொழுது நினைவில்லை. முதற்கட்ட விசாரணையை பற்றி நான் சி.டி யில் குறிப்பிட்டுள்ளேனா என்றால், வழக்கு பதிவு செய்யப்பட்டதற்கு பின்பு உள்ள விவரங்கள் அனைத்தையும் குறிப்பிட்டுள்ளேன். முதற்கட்ட விசாரணையின் பொழுது சி.டி. யை ஆரம்பிக்கவில்லை. முதற்கட்ட விசாரணையின் பொழுது நான் சம்மந்தப்பட்ட ஆவணங்களை ஆராய்ந்து விவரங்களை சேகரித்தேன். முதற்கட்ட விசாரணையின்பொழுது நான் யாரையும் விசாரிக்கவில்லை. முதற்கட்ட விசாரணையின் பொழுது சி.ஆர்.பி.சி 160 ன்படி நான் யாருக்கும் சம்மன்அனுப்பவில்லை, காரணம் நான் யாரையும் விசாரிக்கவில்லை. முதற்கட்டவிசாரணையின் பொழுது எந்த, எந்த இலாக்கா அதிகாரிகளை சந்தித்தேன் என்று தற்போது எனக்கு நினைவில்லை. 15 வருடங்கள் ஆகிவிட்டது குறிப்பிட்டு கூற இயலவில்லை. முதற்கட்ட விசாரணையின்பொழுது என்ன, என்ன ஆவணங்களை திரட்டினேன் என்றால், எனது விசாரணையானது Discreet என்பதால் என்னால் குறிப்பிட இயலாது. எனது முதற்கட்ட விசாரணையின் அறிக்கையை நான் தலைமையகத்திற்கு அனுப்பிய பின் 23-11-2011 அன்று தலைமையகத்திலிருந்து எனக்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு எழுத்துபூர்வமான அறிவுறுத்தல் அனுப்பினார்கள். அதன் அடிப்படையில்தான் நான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். எனது முதற்கட்ட விசாரணை அறிக்கையில் வருமானத்திற்கு அதிகமாக உள்ள தொகையாக ரூ.37,08,092/- என்று குறிப்பிட்டுள்ளேன். முதற்கட்ட விசாரணையின்பொழுது என்னுடன் எந்த, எந்த அதிகாரிகள் இருந்தார்கள் என்று தற்பொழுது எனக்கு நினைவில்லை. முதற்கட்ட விசாரணை சம்மந்தப்பட்ட எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தற்பொழுது என்னிடம்

இல்லை. காசோலை எண்.463717 தேதி 22-10-2005 ல் சொல்லப்பட்ட ரூ.25 லட்சம் வங்கி பரிவர்த்தனைமூலம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன காசோலையை பரிசீலனை செய்தபொழுது செக்பீரியடில் அந்த தொகை மீண்டும் காசோலை எண்.247185, நாள் 05-10-2007 தேதியிட்ட சிட்டியூனியன் வங்கி காசோலை மூலம் மேரீஸ் சிமெண்ட் கம்பெனி கணக்கிற்கு வரப்பெற்றுள்ளதாக நான் சாட்சியம் அளித்திருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. மேரீஸ் சிமெண்ட்டிலிருந்து சக்தி பிலிம்ஸ் நிறுவனத்திற்கு ரூ.20 லட்சம் காசோலை எண் 144205, நாள் 02-04-2004 மூலமாக அனுப்பட்டுள்ளது என்று சொன்னால், எதிரிக்கு final opportunity notice கொடுத்து பதில் தரும்பொழுது தன்னுடைய மனைவி திருமதி விஜயலட்சுமி அவர்கள் ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி காசோலை எண்.144205 மூலம் சக்தி பிலிம்ஸ் நிறுவனத்திற்கு ரூ.20 லட்சம் கொடுத்து அதற்கான வட்டி ரூ.1,55,520/- உடன் அசலும் சேர்த்து 2007 ஆம் வருடத்தில் ரூ.21,55,520/- வரப்பெற்றது என்று தெரிவித்ததன் அடிப்படையில் பரிசீலித்தபொழுது அவர்களுடைய ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி கணக்கிற்கு இந்த காசோலை வழங்கப்படவில்லை. 11-10-2007 S.crs என்ற தலைப்பில் ரூ.46,55,520/- எதிரியின் வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. Final notice ற்கு பதில் கொடுக்கும்பொழுது எதிரியானவர் மேற்கண்ட விவரத்தை என்னிடம் கூறினார். இந்த விவரத்தை எதிரியின் ஆடிட்டர் பழனிசாமியும் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார் என்று சொன்னால், அதை பற்றி எனக்கு தெரியாது. சக்தி பிலிம்ஸ்யின் உரிமையாளர் திரு.சுப்பிரமணியம் அவர்களை நான் விசாரிக்கவில்லை. சிட்டி யூனியன் வங்கியின் உதவி பொது மேலாளரான கே.ஆர்.ராஜேஸ்வரியை நான் 18-02-2012 அன்று விசாரிக்கும் பொழுதும், மற்றும் 01-06-2012 அன்று விசாரிக்கும்பொழுதும் Final notice ற்கு எதிரி கொடுத்த விளக்கத்தில் உள்ள தொகைகளை பற்றி நான் கேட்கவில்லை என்று சொன்னால், சரிதான். மேற்சொன்ன

ராஜேஸ்வரியை விசாரித்த 15 வது நாளில் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அ.சா.36 போலீசார் விசாரணையின்பொழுது ரூ.39,597/- எதிரியின் கணக்கில் வட்டியாக வரவு வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன ரூ.39,597/- ஐ நான் எனது அறிக்கையில் வரவு வைத்துள்ளேனா என்றால், வைத்துள்ளேன். வங்கிகளிலிருந்து நான் வாங்கிய ஆவணங்கள் அனைத்தையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காகத்தான் வாங்கினேன் என்று சொன்னால், சரிதான். வங்கிகளிலிருந்து இந்த வழக்கிற்காக நான் சேகரித்த ஆவணங்கள் Bankers books evidence Act 1891-ன்படி வாங்கவில்லை என்பதால் அந்த ஆவணங்கள் அனைத்தும் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியாது ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. மேல் அதிகாரியின் நிர்பந்தத்தின் அடிப்படையில் எதிரிக்கு எதிராக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 30-09-2021 அன்று குறுக்கு விசாரணையின்பொழுது எதிரி சொத்துக்களை அதிகமாக வாங்கிய காலத்தை கொண்டு மதிப்பீட்டு காலத்தை நிர்ணயம் செய்ததாக நான் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் என்ன, என்ன சொத்துக்கள் என்று நான் விவரமாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேரீஸ் சிமெண்ட் கம்பெனியில் எதிரி ஒரு இயக்குனர் என்று சொன்னால் சரிதான். அவரது மனைவி விஜயலட்சுமியும் இறக்கும்வரை இயக்குனராக இருந்தார் என்று சொன்னால் சரிதான். எதிரிக்கு எதிராக தவறான ஒரு வழக்கைதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை

ஒம்/சண்முகபிரியா,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.